இன்றன. அடுத்த தேர்தல் நடப்பதற்கு முன் நகரசபை வார்டுகளைத் திட்டவட்டமாக நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஏற்கனவே இந்தத் தேர்தல் நடக்க இருந்ததால் ரீ டிஸ்ட்ரிப்யூஷன் ஆப் வார்ட்ஸ் செய்ய முடியாத நிலைமை இருந்தது. அதோடு 1961-ல் சென்ஸஸ் நடைபெற்றதனால் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று ஒத்திபோடப்பட்டது. இப்போதுள்ள நெருக்கடி நிலைமையை உத்தேசித்து ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: தேர்தல் கமிஷன் இடைத் தேர்தல்கள் நடத்தலாம் என்று சொல்லியிருக்கும்போது, அரசாங்கம் இந்தத் தேர்தல்களையும் நடத்துவதற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: தேர்தல் கமிஷன் இடைத் தேர்தலைப்பற்றித் தான் கூறுகிறது.

எக்ஸ்பிரஸ் பஸ்கள் (வருமானம்)

* 64 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960, 1961 ஆண்டுகளில் நீண்ட தூர எக்ஸ்பிரஸ் பஸ்கள் மூலம் அரசாங்கத்துக்குக் கிடைத்த தொகை எவ்வளவு?

(இ) இவ்வாறு எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடுவதால் ஆன செலவு எவ்வளவு?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:

(அ) & (இ)

வருடம்	வரவு	செலவு
1960	ரூ. 4,36,004.88	ரூ. 3,70,922.82 ந.பை.
1961	ரூ. 13,09,275.38	ரூ. 11,39,814.34 ந.பை.

திரு. ஆ. கு. சுப்பையா: கனம் அமைச்சர் அவர்கள் வருமானத்தையும் செலவையும் சொல்லுகிறபோது லாபம் அதிகமாக வருகிறது என்று தெரிகிறது. ஆகவே அரசாங்கம் இன்னும் அதிகமான பஸ்களை விடுவதற்கு யோசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: படிப்படியாக நீண்ட தூர பஸ்களை அதிகமாக்க வேண்டுமென்பது சர்க்காரின் கொள்கை. இது நிதி வசதியைப் பொறுத்து செய்யப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி: சாதாரணமாக தனியார் துறையில் நடத்தப்படும் பஸ்களில் வரும் லாபத்தைவிட சர்க்காரால் நடத்தப்படும் பஸ்களில் வரும் லாபம் மிகக் குறைவு என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

5th February 1963]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் சொல்வது சரியல்ல. முற்றிலும் தவறு.

திரு. து. ப. அழகமுத்து : எக்ஸ்பிரஸ் பஸ்களில் ஒவ்வொரு பஸ்ஸிலும் கலெக்‌ஷன் பெர்செண்டேஜ் சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒரு பஸ்ஸுக்கு எவ்வளவு என்று கணக்குப் போட முடியாது. மைலுக்கு எவ்வளவு வருமானம் என்பதைக் கணக்குப் போட்டு வைத்திருக்கிறோம். 1960-ல் எக்ஸ்பிரஸ் பஸ் மூலம் ஒரு மைலுக்கு வருமானம் 108 நயா பைசா, செலவு 92 நயா பைசா. 1961-ல் மைலுக்கு வருமானம் 121 நயா பைசா, செலவு 105 நயா பைசா.

திரு. ஜே. மாதா கவுடர் : இப்பொழுது 120 மைலுக்கு மேலாக உள்ள மார்க்கங்களில் சர்க்கார் பஸ் விடுவது என்ற கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிறோம். எழுபத்தைந்து மைல்களுக்கு மேலுள்ள ரூட்களிலும் சர்க்கார் பஸ்கள் விடுவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முதலில் எடுத்த காரியத்தைச் செய்து முடிப்போம். அதற்குப் பிறகு விஸ்தரிப்பது பற்றி யோசிக்கலாம்.

திரு. ம. கமலநாதன் : அரசாங்கம் விடும் பஸ்களில் கட்டணம் அதிகமாக இருப்பதனால், மக்கள் கோயம்புத்தூருக்கு நேரடியாக அதிகமான அளவுக்குப் பிரயாணம் செய்யவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? உதாரணமாக, கிருஷ்ணகிரிக்கு அரசாங்க பஸ்ஸில் ரூ. 7¾ கட்டணம் கொடுக்கிறோம். தனியார் நடத்தும் எக்ஸ்பிரஸ் பஸ்ஸுக்குக் கட்டணம் ரூ. 6 தான். ஆகையால் கட்டணத்தைக் குறைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்றைக்குக் கட்டணம் குறைக்கப்படாமல் இருக்கும்பொழுதே அரசாங்க பஸ்ஸில் எல்லோரையும் ஏற்றிக்கொள்ள முடியவில்லை என்ற குறை ஏராளமாக வந்திருக்கிறது. ஆதலால் குறைவான கட்டணம் ரூ. 6 கொடுத்து சுலபமாகப் பிரயாணம் செய்ய விரும்புகிறவர்கள் தனியார் வண்டியில் போகட்டும். ரூ. 7¾ கொடுத்துப் போக வேண்டும் என்று நினைக்கிறவர்கள் அரசாங்க வண்டியில் போனால் போதும்.

திரு. வை. சங்கரன் : அரசாங்கம் நீண்ட தூர பஸ்கள் விடுவது ' பிரைவேட் எண்டர்பிரைஸோடு ' கம்பேர் செய்தால், ' பேவரபிள் ' -ஆக இருக்கிறதா ? இல்லையென்றால், அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதைக் ' கம்பேர் ' செய்ய முடியாது. ' கம்பேர் ' செய்வதற்கு எந்த விதமான புள்ளி விவரங்களும் சர்க்காரிடத்தில் கிடையாது. கனம் அங்கத்தினர்

அவர்கள் தயாரித்துக் கொடுத்தால், தாங்களும் எங்களுடைய புள்ளிவிவரங்களைக் கொடுக்கிறோம். இரண்டையும் அவர்கள் பார்த்து 'கம்பேர்' செய்துகொள்ளலாம்.

கோழி முட்டை விநியோகம் (சென்னை)

*66 கேள்வி.—திரு. நா. ப. செங்கோட்டுவேலு : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை நகரத்தில் கோழிமுட்டைத் தேவை எவ்வாறு ஈடு கட்டப்படுகிறது?

கனம் திரு. பூ. கக்கன் : கேரள மாகாணத்திலுள்ள கீழ்கண்ட இடங்களிலிருந்து தற்போது ஒவ்வொரு கூடையிலும் 300 முட்டைகள் கொண்ட சுமார் 200 கூடைகள் சென்னை நகரத்திற்கு தினசரி வந்து சேருகின்றன:—

(1) திருவனந்தபுரம்

(2) கொல்லம்

(3) காயங்குளம்

(4) எர்ணுகுளம்

(5) மங்காம்லு

(6) சங்கனுசேரி

மற்றும் தினசரி மூன்று அல்லது நான்கு கூடைகள் நிறைய திருத்தணியிலிருந்தும், நகரியிலிருந்தும் சென்னைக்கு முட்டை வந்து சேருகின்றன. இவைகள் நகரின் தேவைக்கு போதுமானதாயிருக்கின்றன.

About 200 baskets (each basket containing 300 eggs) are being received from the following places in Kerala :—

(i) Trivandrum

(ii) Quilon

(iii) Kayankulam

(iv) Ernakulam

(v) Mangamlu

(vi) Chenganachery.

About 3 to 4 baskets of eggs per day are also received in the city from Thiruthani and Nagari. The supply position is adequate now.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, question No. 65 has not been answered.

MR. SPEAKER : Since the Hon. Minister for Agriculture has already answered question No. 66. I will now allow supplementaries on it and then take up question No. 65.